# உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து,

## நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன். வெளி 3 : 9

**நான், உன் மேல் அன்பாயிருக்கிறதை அறிந்து கொள்ளும்படி செய்வேன்**

பாவ பாரத்தினாலும், மற்றவர்களின் புறக்கணிப்பினாலும் சோர்ந்து போன என் அன்பு சகோதரனே, சகோதரியே, உன்னை ஏளனமாக நினைக்கிறார்களா ?

**"உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன்"** –என

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உனக்கு வாக்களிக்கிறார்.

**ஏனெனில் வேதம் கூறுகிறது. நீதிமொழிகள் 24:16**

நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் எழுந்திருப்பான்.

– அதற்காக தன் நீதியை நம்பி அநியாயம் செய்யக் கூடாது.

**அதற்குப் பதிலாக 1 யோவான் 1 : 9 கூறுகிறது**

நாம் நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டால், எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார்.

**எச்சரிப்பின் சத்தம் எசேக்கியேல் 33 : 13**

பிழைக்கவே பிழைப்பாய் என்று நான் நீதிமானுக்குச் சொல்லும்போது, அவன் தன் நீதியை நம்பி, அநியாயஞ் செய்தால் அவனுடைய நீதியில் ஒன்றும் நினைக்கப்படுவதில்லை. அவன் செய்த தன் அநியாயத்திலே சாவான்.

**ஆதலால் வெட்கப்படாமல் அறிக்கை செய் – நீதி 28 : 13**

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.

**அன்பு திரளான பாவங்களை மூடும்**

தேவன் உன் மேல் அன்பாயிருக்க வேண்டுமானால் அவரிடத்தில் உன் பாவத்தை அறிக்கை செய். அத்துடன் விட்டுவிடு.தேவனிடத்தில் பாவத்தை மறைக்காதே.

நீ பாவத்தை மறைக்காதே. நீ பாவத்தை அறிக்கை செய்தாலும் செய்யாவிட்டாலும், தேவன் உன் பாவத்தை அறிந்திருக்கிறார். நீ பாவத்தை அறிக்கை செய்து விட்டு விட்டாயா ? என ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். ஏனெனில் தேவனிடத்தில் இரக்கங்களும், மன்னிப்புகளும் உண்டு. ஏனெனில் நம் தேவன் அன்புள்ளவர்.

**வெளிப்படுத்தல் 1 : 6 கூறுகிறது :** நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களை நம்மை கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக – ஆமென்.

நீ பாவத்தை அறிக்கை செய்து, விட்டு விடும்போது அந்த அன்பு உன்னுடைய திரளான பாவங்களை மூடி விடுகிறது. அப்பொழுது உனக்கு விரோதமாய் எழும்பினவர்கள், உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து கர்த்தர் உன் மேல் அன்பாயிருக்கிறதை அறிந்து கொள்ளுவார்கள். இதுவே பெரிய ஆசீர்வாதம்.

**யூதா 1 : 21 கூறுகிறது :** தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக் கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெற காத்திருங்கள்.

**1 யோவான் 2 : 5 தேவ அன்பு :** அவருடைய வசனத்தைக் கைக் கொள்ளுகிறவர்களினிடத்தில் தேவ அன்பு மெய்யாய் பூரணப்பட்டிருக்கும். நாம் அவருக்கும்(கர்த்தருக்குள்) இருக்கிறோம் என்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்.

**2 யோவான் 6 கூறுகிறது** : அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு. நீங்கள் ஆதி முதல் கேட்டிருக்கிறபடி நடந்து கொள்ள வேண்டிய கற்பனை இதுவே.

**1 யோவான் 3 : 23 கூறுகிறது** :நாம் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமாயிருந்து, அவர் நமக்கு கட்டளையிட்டபடி ஒருவரோடொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது.

எனக்கு அன்பான கர்த்தருடைய பிள்ளையே,

நீ கற்பனைகளின்படி நடந்து, ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால் உன்னுடைய திரளான பாவங்கள் மூடப்படும்.

என்னுடைய ஒரு பாவத்தை சுட்டிக் காட்டி ஊரெல்லாம் தூற்றுகிறார்களே என்று நொந்துபோன சகோதரியே, சகோதரனே, மனம் நொந்து போக வேண்டாம்.

உன்னைத் தூற்றுகிறவர்களிடத்தில் ஆயிரம் பாவங்களை கர்த்தர் காண்கிறார். ஏனெனில் அவர்கள் பாவங்கள் அவர்கள் கண்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அவர்கள் உன்னை தூற்றிக் கொண்டு அலைகிறார்கள்.

**ஆதலால் தான் மத்தேயு 7 : 4,5 – ல் இயேசு கூறினார்**

இதோ உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி, நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்து போடட்டும் என்று நீ சொல்வதெப்படி ?

மாயக்காரனே, முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப் போடு. பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போட வகை பார்ப்பாய்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

உன் வாழ்க்கையில் ஏற்பட்ட தவறை நினைத்து கண் கலங்குவதை விட, தவறை தேவனிடத்தில் அறிக்கை செய்து விட்டுவிட்டு தேவனிடத்தில் (கிறிஸ்துவின் இரத்தத்தினால்) ஒப்புரவாக பரிசுத்த ஆவியானவர் வசனத்தின் மூலம் உங்களோடு இடைபடுவாராக.

**நான், உன் மேல் அன்பாயிருக்கிறதை அறிந்து கொள்ளும்படி செய்வேன்.**